பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 07 2026 THURSDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1) சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு, நாட்டின் வரி கட்டமைப்பில் பெரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2) தவெக சட்டப்பேரவை உறுப்பினருக்கு 35 கோடி ரூபாய் வழங்க முன்வந்த சம்பவம் தொடர்பாக மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

3) போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

4) மருத்துவர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

5) 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Neeraj Patel வெண்கலப்பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு, நாட்டின் வரி கட்டமைப்பில் பெரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த வரிவிதிப்பு செயல்படுத்தப்பட்டு ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் ஒரு லட்சத்து 95 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் 13 புள்ளி ஒன்பது சதவீதம் அதிகமாகும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரி கட்டமைப்பில் ஒரு கோடியே 65 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரி வருவாய் அதிகரித்ததோடு, வரி விதிப்பிற்கான நடைமுறைகளும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தவெக தோழமை கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் இன்று சென்னையை அடுத்த கோவளத்தில் நடைபெற்றது.

அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு விஜய் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், காங்கிரஸ், மதிமுக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்திற்கு பின்னர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு மாணிக்கம் தாகூர் செய்தியாளர்களிடம் பேசினார்.

கூட்டணிக்கு பெயர் வைப்பது, ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்துவது, குறைந்தபட்ச பொது செயல்திட்டத்தை உருவாக்குவது போன்ற முடிவுகள் இதில் மேற்கொள்ளப்பட்டதாக திரு மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தவெக சட்டப்பேரவை உறுப்பினருக்கு 35 கோடி ரூபாய் வழங்க முன்வந்த சம்பவம் தொடர்பாக மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் இளையராஜாவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஒருவர், 35 கோடி ரூபாய் தர முன்வந்ததாக காவல்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சட்டப்பேரவைத் தலைவருக்கு எதிராக கொண்டுவரும் தீர்மானத்திற்கு ஆதரவாக செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் இந்த தொகையை தர அவர் முன்வந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தியதில், திமுக-வை சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு செந்தில்பாலாஜி மற்றும் அவரது சகோதரர் திரு அசோக்குமாரின் அறிவுறுத்தலின்பேரில் அவர்கள் இந்த தொகையை தர முன்வந்ததாகவும், இதுகுறித்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சமூக நீதியை காக்க தவெக அரசு தவறிவிட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், தவெக அரசு பொறுப்பேற்ற 50 நாட்களில் மாநிலத்தில் ஐந்து ஆணவப் படுகொலைகள் நடைபெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து முதலமைச்சர் கருத்து ஏதும் தெரிவிக்காமல் மௌனமாக இருப்பது ஏன் என்றும் திமுக அந்த அறிக்கையில் வினவியுள்ளது.

<<<<<<>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி தமிழிசை சௌந்தரராஜன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று குடியாத்தத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைக்காக வலி நிவாரணி மாத்திரைகளும் பயன்படுத்தப்படுவது கவலையளிக்கக் கூடியதாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

அரசு மருத்துவமனைகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

மருத்துவர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மருத்துவர்கள் உரிய ஊதியம் கோரி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இக்கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் திரு சண்முகம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட 17 பேரின் நியமனங்களை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

இந்த தேர்வு நடைமுறைகளில் முறைகேடு நடைபெற்றதாக எழுந்த புகாரின் அடிப்படையில் தாமாக முன்வந்து இவ்வழக்கினை விசாரணை செய்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு என். செந்தில்குமார் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இப்பதவிகளுக்கு விதிகளை பின்பற்றி மீண்டும் தேர்வு நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நாளை மறுநாள் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 54 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை மாநில அமைச்சர் திருமதி கமலி இன்று ஆய்வு செய்தார்.

----------

நாமக்கல் மாவட்டத்தில் மாநகராட்சி முன்களப் பணியாளர்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சார்பில், உணவு மற்றும் முகக்கவசம் வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

------------

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் அருகே வெறிநாய் கடித்ததில் 20-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன.

----------------

தாம்பரம் — போடி இடையேயான சிறப்பு ரயில் சேவை இரு மார்க்கங்களிலும் வரும் 25-ஆம் தேதிவரை நீட்டிக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

------------

சென்னை மாநகர காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் முகாம் ஆணையார் திரு அமல்ராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.

------------ செ கு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் கோதண்டராமர் திருக்கோவில் ஆனி பிரம்மோற்சவ தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

---------------

*விளையாட்டுச் செய்திகள்*

**20** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Neeraj Patel** வெண்கலப்பதக்கம் வென்றார்.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் **55** கிலோ எடைப்பிரிவு வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் அவர் **4-3** என்ற புள்ளிக்கணக்கில், ஜப்பானின் **Naru Semba** -வை வென்றார்.

----------------

உலக பாரா வில்வித்தை போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

செக் குடியரசில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் **Harvinder**

**Singh — Vijay Sundi** இணை **6-2** என்ற புள்ளிக்கணக்கில் இத்தாலியின் **Davide Bettoni — Stefano** இணையை வென்றது.

----------------------

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Divyanshi Bhowmick - Abhinandh Pradhivadhi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் **19** வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **11-9, 11-6, 11-7** என்ற செட் கணக்கில், சீனாவின் **Tang Yiren — Jang Yi Yi** இணையை வென்றது.

--------------

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Tanvi Patri** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் **19** வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-18, 21-6** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Christabel Calista Purwanto** -வை வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் **Adharshini Shri, Dhyan Santosh, Dev Ruparelia** ஆகியோர் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**<<<<<<<END>>>>>>>**